# *கிழக்கிலங்கை தமிழறிஞர்களும் முஸ்லிம் சமூகத்துடனான நல்லிணக்கமும் (சுவாமி விபுலாநந்தர், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை ஆகியோரை மையப்படுத்திய ஆய்வு)*


**Mr. N. Subaraj**

Department of Languages, South Eastern University of Sri Lanka, Sri Lanka.

(subaraj84@yahoo.com)



**ஆய்வுச் சுருக்கம்**

*இலங்கையின் கிழக்கு மாகாணம் பல்லின மக்கள் இணைந்து வாழ்கின்ற ஒரு பிரதேசமாகும். பல்லின சமூகம் உள்ள இடத்தில் ஏற்படக்கூடிய முரண்பாடுகளையும் சிக்கல்களையும் கடந்த கால வரலாறுகள் இங்கு பதிவு செய்துள்ளன என்பது மறுப்பதற்கில்லை. இருப்பினும் இம்முரண்பாடுகளுக்கு மத்தியில் அழகிய இணக்கப்பாடான வரலாற்று நிகழ்வுகள் அதிகம் இடம் பெற்றுள்ளன. ஒரு சமூகத்தின் முக்கிய கூறு கல்வி. கல்வியை ஆதாரமாகக் கொண்டு வளரும் சமூகத்தின் பங்களிப்பு நாட்டிற்கு இன்றியமையாததொன்றாகும். கிழக்கு மாகாணத்தின் முக்கிய இரு சமூகங்களான முஸ்லிம் - தமிழ் அறிஞர்களின் புரிந்துணர்வும் தங்களுக்கிடையிலான ஒத்துழைப்புக்களும் கடந்த காலங்களில் இடம் பெற்றுள்ளன. அறிவுப் புலமையை ஒருவருக்கொருவர் கொடுத்துதவி தங்கள் சமூகத்திற்கு அவர்கள் ஆற்றிய பணிகள் அளப்பரியன. 'கற்றாரை கற்றோரே காமுறுவர்ஸ' எனில் எம்மை விரும்பாதவர் உண்மையான கற்றவர் இல்லை என எண்ணி வாழ்ந்தவர்கள் இவர்கள். இவ்வாய்வு முக்கியமாக இரு பெரும் அறிஞர்களை மையப்படுத்தி மேற்கொள்ளப்படுகின்றது. சுவாமி விபுலாநந்தர், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை ஆகியோரை முன்னிலைப்படுத்தி இவ்வாய்வு நகர்கின்றது. இவர்கள் முஸ்லிம் சமூகத்துடன் கொண்டிருந்த உறவுகளையும் அதன் மூலம் ஏற்படுத்தப்பட்ட சமூக நல்லிணக்கத்தையும் இவ்வாய்வு வெளிப்படுத்த முனைகின்றது. இவர்களது உறவினர்களுடன் மேற்கொண்ட நேர்காணல், இவர்களால் எழுதப்பட்ட நூல்கள், இவ்வறிஞர்கள் பற்றி எழுதப்பட்ட நூல்கள், கட்டுரைகள் என்பன இவ்வாய்வின் மூலங்களாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் இப்பெரும் இரு அறிஞர்களும் முஸ்லிம் சமூகத்துடன் கொண்டிருந்த உறவுகள் அவர்களை முஸ்லிம் கல்விச் சமூகத்தில் இன்றும் பேசப்படும் அறிஞர்களாக நிலை நிறுத்தியுள்ளன. முஸ்லிம் கல்விமான்கள் இவர்களுடன் நல்லுறவை பேணி வந்துள்ளனர். இவ்வுறவுகள் பற்றிய ஆய்வுகள் பெரியளவில் வெளிப்படுத்தப்படாமையும் இத்தகைய நல்லுறவுகள் இன்றைய சமூகத்தில் அடையாளப்படுத்தப்படாமையும் இவ்வாய்வின் பிரச்சினைகளாகும். இவர்களுக்கிடையிலான நல்லுறவுகளை வெளிப்படுத்தும் போது இனநல்லுறவுகள் இருசமூகங்களிடமும் விருத்தி பெறுவதோடு முழுச்சமூகத்துக்கும் அவர்களின் காத்திரமான வகிபங்கு கிடைக்கப்பெறும் என்கின்ற நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.*



***திறவுச் சொற்கள்:*** *முஸ்லிம் சமூகம், விபுலாநந்தர், பெரியதம்பிப்பிள்ளை, சமூக நல்லிணக்கம்*


**ஆய்வு அறிமுகம்**

இலங்கையின் கிழக்கு மாகாணம் பல்லின மக்கள் இணைந்து வாழ்கின்ற ஒரு பிரதேசமாகும். பல்லின சமூகம் உள்ள இடத்தில் ஏற்படக்கூடிய முரண்பாடுகளையும் சிக்கல்களையும் கடந்த கால வரலாறுகள் இங்கு பதிவு செய்துள்ளன என்பது மறுப்பதற்கில்லை. இவற்றை விட முரண்பாடுகளுக்கு மத்தியில் அழகிய இணக்கப்பாடான வரலாற்று நிகழ்வுகள் அதிகம் இடம் பெற்றுள்ளன. ஒரு சமூகத்தின் முக்கிய கூறு கல்வி. கல்வியை ஆதாரமாகக் கொண்டு வளரும் சமூகத்தின் பங்களிப்பு நாட்டிற்கு இன்றியமையாததொன்றாகும். கிழக்கு மாகாணத்தின் முக்கிய இரு சமூகங்களான முஸ்லிம் - தமிழ் அறிஞர்களின் புரிந்துணர்வும் தங்களுக்கிடையிலான ஒத்துழைப்புக்களும் கடந்த காலங்களில் இடம் பெற்றுள்ளன. அறிவுப் புலமையை ஒருவருக்கொருவர் கொடுத்துதவி தங்கள் சமூகத்திற்கு அவர்கள் ஆற்றிய பணிகள் அளப்பரியன. 'கற்றாரை கற்றோரே காமுறுவர்' எனில் எம்மை விரும்பாதவர் உண்மையான கற்றவர் இல்லை என எண்ணி வாழ்ந்தவர்கள் இவர்கள்.

இவ்வாய்வு முக்கியமாக இரு பெரும் அறிஞர்களை மையப்படுத்தி மேற்கொள்ளப்படுகின்றது. சுவாமி விபுலாநந்தர், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை ஆகியோரை முன்னிலைப்படுத்தி இவ்வாய்வு நகர்கின்றது. இவர்கள் முஸ்லிம் சமூகத்துடன் கொண்டிருந்த உறவுகளையும் அதன் மூலம் ஏற்படுத்தப்பட்ட சமூக நல்லிணக்கத்தையும் இவ்வாய்வு வெளிப்படுத்த முனைகின்றது

**ஆய்வுப் பிரச்சினை**

கடந்த காலங்களில் இப்பெரும் இரு அறிஞர்களும் முஸ்லிம் சமூகத்துடன் கொண்டிருந்த உறவுகள் அவர்களை முஸ்லிம் கல்விச் சமூகத்தில் இன்றும் பேசப்படும் அறிஞர்களாக நிலை நிறுத்தியுள்ளது. முஸ்லிம் கல்விமான்கள் இவர்களுடன் நல்லுறவை பேணி வந்துள்ளனர். இவ்வுறவுகள் பற்றிய ஆய்வுகள் பெரியளவில் வெளிப்படுத்தப்படாமையும் இத்தகைய நல்லுறவுகள் இன்றைய சமூகத்தில் அடையாளப்படுத்தப்படாமையும் இவ்வாய்வின் பிரச்சினைகளாகும்.

**ஆய்வின் நோக்கம்**

இவர்களுக்கிடையிலான நல்லுறவுகளை வெளிப்படுத்தும் போது இனநல்லுறவுகள் முடிவெடுக்கும் அறிஞர்களிடம் முழுமைபெறுவதோடு முழுச்சமூகத்துக்கும் அவர்களின் காத்திரமான வகிபங்கு கிடைக்கப்பெறும் என்கின்ற நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வெல்லை**

ஆய்வின் விரிவஞ்சி சுவாமி விபுலாநந்தர், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை ஆகியோரை முன்னிலைப்படுத்தி இவ்வாய்வு நகர்கின்றது. இவர்கள் முஸ்லிம் சமூகத்துடன் கொண்டிருந்த உறவுகளையும் அதன் மூலம் ஏற்படுத்தப்பட்ட சமூக நல்லிணக்கத்தையும் இவ்வாய்வு வெளிப்படுத்துகின்றது.

**ஆய்வு முறையியல்**

குறிப்பிட்ட தமிழ், முஸ்லிம் அறிஞர்களின் உறவினர்களுடன் மேற்கொண்ட நேர்காணல், இவர்களால் எழுதப்பட்ட நூல்கள், இவ்வறிஞர்கள் பற்றி எழுதப்பட்ட நூல்கள், கட்டுரைகள் என்பன இவ்வாய்வின் மூலங்களாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

**ஆய்வின் மையமும் கலந்துரையாடலும்**

**01. சுவாமி விபுலாநந்தரும் புலவர்மணியும்**

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் காரைதீவில் 1892இல் சுவாமி விபுலாநந்தர் பிறந்தார். மட்டக்களப்பின் மண்டூர் எனும் கிராமத்தில் 1899இல் பிறந்தவர் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை. இருவருக்குமிடையில் 7 ஆண்டுகளே வேறுபாடு இருப்பினும் புலவர்மணி விபுலாநந்தடிகள் மீது கொண்டிருந்த பற்றும் மரியாதையும் அளப்பரியன. புலவர்மணி விபுலாநந்தர் பற்றிப் பாடிய 'யாழ்நூல் தந்தோன்', 'விபுலானந்த மீட்சிப்பத்து' ஆகிய கவிதை நூல்கள் இதற்கு தக்க சான்றுகள். இருவரும் சமகாலத்திலே வாழ்ந்து பெருஞ்சாதனை படைத்த பேரறிஞர்கள்.

விபுலாநந்தர் கல்முனை மெதடிஸ்த கல்லூரியிலும் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியிலும் ஆரம்பக்கல்வியைக் கற்று புனித மிக்கேல் கல்லூரியிலேயே சிறிது காலம் ஆசிரியராக பணிபுரிந்தார். பின்னர் கொழும்பு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்து கல்வி கற்று பயிற்றப்பட்ட ஆசிரியரானார். மீண்டும் புனித மிக்கேல் கல்லூரியில் இரண்டு ஆண்டுகள் ஆசிரியராகயிருந்து 1915இல் கொழும்பு அரசினர் தொழில்நுட்பக்கல்லூரியில் சேர்ந்து அறிவியலில் டிப்ளோமா பெற்றுக் கொண்டார். மதுரைத் தமிழ்ச் சங்கம் நடாத்திய பண்டிதர் தேர்வில் தேர்ச்சியும் பெற்றார். 1920இல் இலண்டன் பல்கலைக்கழகத்தில் பி.எஸ்.சி (B.Sc) பட்டத்தினையும் பெற்றார்.[1] இக்காலப்பகுதிகளில் உதவிவிரிவுரையாளர், அதிபர் என சிறப்பான பதவிகளை வகித்த அடிகளார் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் இலங்கைப் பல்கலைக்கழகத்திலும் தமிழ்ப் பேராசிரியராக பணிபுரிந்தமை முக்கியமானவை. இதைவிட இராமகிருஷ்ணமிஷனில் துறவு பூண்டு சமூகத் தொண்டில் இணைந்தமையே அவரை சமூகத்தில் பெரிதும் அடையாளங் காட்டியது.

அடிகளாரைப் போன்று சமூகத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்தான் புலவர்மணி. புலவர்மணி மண்டூர் உவெஸ்லியன் மிசன் தமிழ்பாடசாலையில் கல்வி கற்றவர். உயர் கல்வியை கல்முனையிலும் யாழ்ப்பாணம் நாவலர் காவியப்பாடசாலையிலும் கல்வி பயின்றார். 1926இல் திருகோணமலை இந்துக்கல்லூரி, கத்தோலிக்க ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, மட்டுநகர் அரசினர் உயர்தரக்கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியராகவும் விரிவுரையாளராகவும் பணியாற்றினார்.[2]

புலவர்மணி, சுவாமி விபுலாநந்தர் இருவரும் ஒத்தபாதையில் பயணம் செய்தவர்கள். அடிகளார் துறவு பூண்டமையே இருவருக்குமிடையிலான வேறுபாடெனலாம். இந்தவகையில் இவர்கள் முஸ்லிம் சமூகத்துடன் கொண்டிருந்த நெருக்கம் முக்கியமானதொன்றாகும். இஸ்லாமிய கல்விமான்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களாக இவர்கள் இருந்தனர்.

**02. சுவாமி விபுலாநந்தரும் முஸ்லிம் சமூகமும்**

விபுலாநந்தர் பிறந்த கால மற்றும் இடச் சூழல் அவர் ஒரு பன்முகவாதியாக மாற அடிப்படையாக இருந்தது. குறிப்பாக அவர் முஸ்லிம் சமூகத்துடன் கொண்டிருந்த தொடர்பு குறிப்பிட்டு நோக்க வேண்டியதொன்று. "மட்டக்களப்பின் தென்கரைப் பிரதேசத்தில் அமைந்திருக்கின்றது சுவாமிகள் பிறந்த காரைதீவு கிராமம், மிக அன்னியோன்யமாக இரு சமூகத்தினரும் இப்பிரதேசத்தில் வாழ்ந்தனர், முஸ்லிம்களின் சமய விழாக்களில் இந்துக்களும், இந்துக்களின் சமய விழாக்களில் முஸ்லிம்களும் பங்கு கொண்டும் பொருளுதவி புரிந்தும் வாழ்ந்த காலமது. தொழில்ரீதியாகவும் இந்த உறவு நிலைத்தது. இந்துக்களிடம் முஸ்லிம்களும் முஸ்லிம்களிடம் இந்துக்களும் கல்வி கற்றனர். முஸ்லிம்கள் பலர் சைவசமய அறிவும் இந்துக்கள் இஸ்லாமிய அறிவும் பெற்று ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல் வாழ்ந்த பொற்காலம் அது. அண்மையில் துயர் மிகுந்த சம்பவங்கள் நிகழும்வரை இந்த நிலை தொடர்ந்தது. இந்த ஆரோக்கியமான சூழலிற் கனிந்த அன்புப் பழம்தான்

சுவாமி விபுலாநந்தர்'' என அடிகளாரின் காலச் சூழல் பற்றி எடுத்துரைக்கின்றார்.[3] பேராசிரியர் சி. மௌனகுரு, ''பிரிவுகள் இல்லாத சாதி பேதங்கள் இல்லாத வருண பேதங்கள் இல்லாத இன பேதங்கள் இல்லாத ஒரு மனித குலத்தையே விபுலாநந்தர் கனவு கண்டார் என்பதை அவர் எழுத்துக்கள் காட்டுகின்றன'' எனக் கூறுவதனூடாக அவர் இஸ்லாம் சமூகத்துடன் நெருங்கிய உறவைப் பேணியிருக்க முடியும் என்பது புலனாகின்றது.

(அ) இஸ்லாத்தின் தோற்றம் பற்றி:
இஸ்லாத்தின் தோற்றம் பற்றி சுவாமி விபுலாநந்தர் கூறும் போது, ''சாதி பேதமின்றிச் சமய ஒற்றுமையினாலே மக்கள் உடன் பிறந்தோர் போல வாழ்தலையும் ஆண்டவனுக்கு தாம் அடிமைகள் எனக் கொள்ளுதலையும் அறத்தாறாகக் கொண்ட சமயநெறியொன்று அக்காலத்திலே அராபி நாட்டிலே தோன்றியது''[4] என்கின்றார் அடிகள். ''இஸ்லாம் மத ஸ்தாபகரான முகம்மது நபி அராபிய நாட்டிலே தர்மோபதேசஞ் செய்ததன் பயனாக மேற்கே ஸ்பானியா முதல் கிழக்கே இந்தியா வீறாகவுள்ள தேசங்கள் அனைத்தும் இஸ்லாமியரது ஆட்சிக்குட்பட்டன''[5] என முகம்மது நபிகளின் சிறப்புக்கள் பற்றியும் தனது கட்டுரையிலே வெளிப்படுத்தியுள்ளார்.

(ஆ) அரேபிய – தமிழ் நாட்டு பக்திப் பிரவாகத்தின் ஒப்பீட்டு நோக்கு:
இஸ்லாத்தின் வரலாற்றில் அரேபிய தேசத்தில் எழுந்த பக்தி பிரவாகத்தை தமிழ் நாட்டில் 6ஆம் நூற்றாண்டு தொடக்கம் 9ஆம் நூற்றாண்டு வரை இடம் பெற்ற பக்தி இயக்கத்தின் செயற்பாட்டுடன் ஒப்பிட்டு நோக்குகின்றார் அடிகளார். இதனை அவர், ''இஸ்லாமிய சமயக்குரவராகிய முகம்மது நபி அராபி நாட்டிலே தோன்றிய காலத்திலே தமிழ்நாட்டில் வாழ்ந்த திருநாவுக்கரசர் (கி.பி.574- 655), சீகாழிப் பகுதியில் தோன்றிய இளைஞராகிய திருஞானசம்பந்தர் (639 – 655) கொல்லம் ஆண்டினைத் தொடங்கிய சேரமான் பெருமாளுக்கு ஆசிரியரும் நண்பருமாகிய சுந்தரமூர்த்திகள் (807 – 825) மந்திரித் தொழிலை நீத்துத் துறவு பூண்ட மாணிக்கவாசகர் என்னும் நால்வரும் அன்பு கலந்த ஞானப் பாடல்களை உலகிற்கு நல்கினார்கள்''[6] என தனது கட்டுரையொன்றில் குறிப்பிட்டுள்ளார். இது பற்றி அவர் தொடர்ந்து அக்கட்டுரையிலே, ''……….அராபி நாட்டிலே வளர்ச்சியெய்திய காலத்திலேயே தமிழ்நாட்டு ஞானவான்களும் அக்கொள்கையை அடிப்படையாகக் கொண்ட ஒரு புதிய சமுதாயத்தை தமது நாட்டிலே நிறுவினார்கள்'' எனக் குறிப்பிடுகின்றார்.

(இ) இஸ்லாமிய கலைகள் பற்றி:
இஸ்லாமியர்களின் கலைகளின் சிறப்பு பற்றி ''முகலாயர்கள், மங்கோலிய இனத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களது முன்னோர்கள் நித்தியமான நீலவானத்தை வழிபட்ட ஷாமா மதத்தைச் சார்ந்தவர்கள் தாஓ மதம், புத்தமதம் ஆகியவற்றை போல் ஷாமா மதமும் அழகுக்கலைகளைப் பேணிய மதமாகும். முகலாயர் ஈரானிய அழகுக் கலையில் நன்கு படித்தவர்கள்''[7] என தனது கட்டுரையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

.(ஈ) இந்து இஸ்லாம் ஒற்றுமை பற்றிய பேசிய அக்பர் பற்றி:
இந்து இஸ்லாம் ஒற்றுமை பற்றிய பேசிய அக்பர் பற்றி அடிகளார் கூறும் போது, ''இஸ்லாமியராகிய அக்பர் சக்கரவர்த்தி, இந்து சமய மனையிலே வளர்ந்தவர். இவர், இரு சமயங்களையும் சமரசப்படுத்திய மதமொன்றினை ஆக்குவதற்கு முயன்றார்''[8] என கூறுகின்றார் அடிகளார்.

(உ) கபீர்தாசர் பற்றி:
இந்துக்களுடைய தெய்வம் காசியிலும் இஸ்லாமியருடைய தெய்வம் மக்கத்திலுமிருக்க அனைவருக்கும் பொதுவாகிய தெய்வம் எல்லா உயிர்களின் இதயத்திலும் இருக்கின்றதென கபீர் கூறினார்[9] என கபீர்தாசர் பற்றி அடிகள் எடுத்துரைக்கின்றார். இந்து இஸ்லாம் ஒற்றுமைக்கு உதாரணமாக விளங்கும் கபீர், அக்பர் போன்றோரின் சிந்தனைகளை தனது கட்டுரைகளிலே குறிப்பிடும் அடிகளார் உண்மையில் சமய, சமூக நல்லிணக்கத்தினை வேண்டியிருந்தார்.

(ஊ) அடிகளின் சிவானந்தா வித்தியாலயமும் முஸ்லிம் சமூகத்துடனான நல்லிணக்கமும்
சுவாமி விபுலாநந்தர் துறவு பூண்டு இராமகிருஸ்ணமிஷன் மடத்துடன் இணைந்த பின்பு கல்லடியில் அமைக்கப்பட்ட சிவானந்தா வித்தியாலயம் சமூகங்களை ஒன்றிணைக்கும் கூடமாக திகழ்ந்தமைக்கு அடிகளே காரணமாக இருந்துள்ளார்.[10] இவரால் அமைக்கப்பட்ட சிவானந்தா வித்தியாலயத்தில் தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழிகளையும் கற்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டமை, அரபு மொழியினை இவர் நன்கு தெரிந்து வைத்திருந்தமை, இவ்வித்தியாலயத்தில் இஸ்லாம் ஒரு பாடமாக கற்பிக்கப்பட்டமை, மௌலவி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டமை போன்றவை இவரது சமரச பார்வையினை வெளிப்படுத்துகின்றது.

சுவாமி விபுலாநந்தரால் ஸ்தாபிக்கப்பட்ட சிவானந்தா பாடசாலை கல்லடியில் அமைக்கப்பட்டதற்கான காரணம் முஸ்லிம்கள் அதிகமாக வாழும் காத்தான்குடியிலிருந்தும் மாணவர்கள் இங்கு வந்து கற்க முடியும் என்பதனாலாகும். இதனை இப்பாடசாலையில் நீண்ட காலமாக அதிபராக கடைமை புரிந்த பெரியார் க.கணபதிப்பிள்ளை அவர்கள் தனது,''Vipulananda A Biography. The man and his achievement'' என்ற நூலில்,

> "When Vipulananda founded Sivananda Vidyalaya at Kalladi Uppodai within a mile of Kattankudy, he meant it to fulfil the educational and cultural needs and aspirations of all the

> three communities; the muslims, the tamils and the Sinhalese of Batticaloa and uva villages in the Bintanne pattu"[11]

எனக் குறிப்பிட்டுள்ளார். அது மாத்திரமின்றி இவ்வித்தியாலயத்திலும் வண்ணார் பண்ணை வித்தியாலயத்திலும் மௌலவி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு இஸ்லாம் பாடம் கற்பிக்கப்பட்டமை பற்றி அஸீஸ் அவர்கள் தனது "The West Reappraised" எனும் நூலில்,

> "Islam classes conducted by a Moulavi that was organized for the spiritual growth of the muslim pupils concerned within the premises of vidyalaya at Vannarponnai and of Shivananda at Batticaloa"[12]

எனக் குறிப்பிட்டுள்ளார்.

(எ) விபுலாநந்தர் முஸ்லிம் கல்விமான்களுடன் கொண்ட தொடர்பு

சுவாமி விபுலாந்தரினால் உருவாக்கப்பட்ட சிவானந்தா பாடசாலையில் கற்று முஸ்லிம் சமூகத்திற்கு பெரும் பணியை ஆற்றிய, ஆற்றிக் கொண்டிருக்கும் அறிஞர்கள், பெரியார்கள் பற்றிய பட்டியல் ஒன்றை நஹியா,ஏ.எம். அவர்கள் தனது 'முஸ்லிம் நேசர் சுவாமி விபுலாநந்தர்' எனும் நூலில் தந்துள்ளார்.[13]

1. புலவர் ஷரிபுத்தின்

இன,மத வேறுபாடுகளின்றி சமரச சிந்தனை கொண்ட அடிகளார் தனக்கு மிகச்சிறந்த மாணவர்கள் எச்சமூகத்திலிருந்து வந்தாலும் அதனை பெரும் வாஞ்சையுடன் ஏற்பவராகத் திகழ்ந்தார். 'நற்சிந்தனைகள் எத்திசைகளிலிருந்தும் எம்மை வந்தடைக'[14] எனும் உபநிடத வாக்கிற்கமைய வாழ்ந்தவர் அடிகளார். புலவர் ஷரிபுத்தின் அவர்கள் அடிளாரின் மிகச் சிறந்த மாணவன். புலவர் மீது அடிகளார் கொண்டிருந்த விருப்பினை புலவரின் கூற்றிலிருந்தே அறியலாம். "தமிழில் எனக்கிருந்த ஆர்வத்தையும் தகுதியையும் கண்டு இங்கு தனக்கொரு மாணவன் கிடைத்திருக்கிறான் என்ற மகிழ்ச்சியால் இவ்வாறு பணித்திருக்க வேண்டும்"[15] என கல்முனையில் நடைபெற்ற மதுரை தமிழ்ச் சங்க பண்டித வகுப்பொன்றில் வைத்து அடிகளார் தனக்கிட்ட பணியொன்று பற்றிக் கூறிய கருத்துக்களை குறிப்பிட்டுள்ளார் புலவர்.

2. அஸிஸ்

அஸீஸ் அவர்கள் 1943 ஒக்டோபர் 14ஆம் திகதி ஆரம்பித்து வைத்த 'கல்முனை வித்தியாவிருத்திச் சங்கம்' பின்பு 1945இல் 'இலங்கை முஸ்லிம் கல்விச் சகாயநிதியாக மறுநாமம் பெற்றதற்கும், பல்லாயிரக்கணக்கான ஏழை முஸ்லிம் மாணாக்கர்கள் இந்நிதியின் உதவியினால் நன்னிலையிருப்பதற்கும் விபுலாநந்த அடிகள் - அஸீஸ் உறவுக்கும் நிறையத் தொடர்புகள் உண்டு.[16] இது பற்றி அஸீஸ் அவர்களே இது பற்றிக் கூறும்போது, "அவர்கள் இந்து மதத்தவராகவும் யான் முஸ்லிம் சாகியத்தவனாகவும் இருந்த போதிலும் கூட எங்கள் அன்புரிமை விரைந்து வளர்வதாயிற்று. அவர்களை யான் எனது மூத்த சகோதரன் போல மதித்து நடந்தேன். சிற்சில விடயங்களில் எனக்குச் சிக்கல் ஏற்படும் போது அவருடைய புத்திமதிகளை நாடிநிற்பேன்"[17] என்றுரைக்கின்றார்.

3. உவைஸ்

பேராசிரியர் ம.மு.உவைஸ் அவர்களுக்கும் சுவாமி விபுலாநந்தருக்கும் நெருங்கிய தொடர்புகள் உண்டு. உவைஸ் அவர்கள் 1946ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகிச் சென்ற போது அங்கே தமிழ்ப் பேராசிரியராகப் சுவாமி விபுலாநந்தர் பணிபுரிந்து கொண்டிருந்தார். முதலாம் வருடத்திலேயே உவைஸ் ஒரு நேர்முகப்பரீட்சைக்கு முகங் கொடுக்க வேண்டியிருந்தது. அந்த நேர்முகப்பரீட்சையை நடத்தியவர்களுள் ஒருவராக சுவாமி விபுலாநந்தரும் இருந்தார். நேர்முகப் பரீட்சையில் அடிகளார் உவைஸிடம் பிரசித்தமான இஸ்லாமிய காப்பியம் ஒன்றைக் கூறும்படி கேட்டுள்ளார். அது பற்றி உவைஸ் அவர்கள் சிந்தித்துக் கொண்டிருந்த போது, அடிகளார், உமறுப்புலவர் எழுதிய சீறாப்புராணம் ஒரு காப்பியமே எனக் கூறினார். அப்போதுதான் புராணங்கள் கூட காப்பியத்தன்மை பெற்றவையாக இருக்கும் என்பதனை உவைஸ் அறிந்து கொண்டார். அன்று தொடக்கம் இருவருக்கும் இடையே நெருக்கம் இருந்து வந்தது. உவைஸ் அவர்களுக்கு மொழிக் கற்கையிலே ஆர்வம் இருந்து வந்தது. அவர் தமிழ் மொழியை சிறப்புக் கற்கையாக மேற்கொண்டவர். அவர் தமிழைச் சிறப்புப் பாடமாகக் கற்பதற்கு மூலகாரணம் சுவாமி விபுலாநந்தரே.

பல்கலைக்கழக முதலாவதாண்டு நேர அட்டவணைப்படி சிங்களத்தை அல்லது தமிழைத்தான் ஒரு மாணவன் கற்க முடியும். இருபாடங்களையும் தேர்ந்தெடுத்து கற்கமுடியாது. ஆனால் உவைஸ் அவர்களோ தமிழ், சிங்களம், பொருளியல் ஆகிய பாடங்களை பயில விரும்பியதால் ஒரு புதிய பிரச்சினையை எதிர்நோக்க வேண்டியிருந்தது. இதிலிருந்து எவ்வாறு விடுபடுவது என்று சிந்தித்துக் கொண்டிருந்த உவைஸ் அடிகளாரை அண்டி ஆலோசனை கேட்டார். அடிகளாரோ அடுத்தவருடம் தமிழைச் சிறப்புப் பாடமாக கற்றால் மாத்திரமே இப்பிரச்சினைக்கு ஒரு தீர்வினைக் கூறமுடியும் என்று உவைசுக்கு தெரிவித்தார். உவைசும் இதற்கு ஒப்புதல் செய்யவே பிரச்சினைக்கு நல்லதோர் தீர்வு கிடைத்தது.[18]

(ஏ) விபுலாநந்தர் பற்றி முஸ்லிம் அறிஞர்கள் எழுதிய நூல்களுள் சில:

1. அஸீஸ்.ஏ.எம்.ஏ, 1948,“யான் அறிந்த விபுலாநந்த அடிகள்”,ஈழமணி (சஞ்சிகை)
2. அஸீஸ்.ஏ.எம்.ஏ, 1958,“Vidyalaya and Vipulananda”
3. ஷரிபுத்தீன்,ஆ.மு. “சுவாமிகளின் கற்பித்தற் சிறப்பு”
4. ஷரிபுத்தீன்,ஆ.மு. “விபுலாநந்தர் பதிகம்”
5. நுகுமான்,எம்.ஏ.,“சுவாமி விபுலாநந்தரின் மொழிநடை – பழமையும் புதுமையும்

(ஐ) சுவாமி விபுலாநந்தரின் இறுதிக்கிரியை – சமூக நல்லிணக்கத்தின் அடையாளம்

சுவாமி இறையடி சேர்ந்ததும் அவரது உடல் மட்டக்களப்புக்கு வந்தபோது அனைத்து மதத்தைச் சார்ந்த கல்விமான்களும் அரசியல் முக்கியஸ்தர்களும் மக்களும் குழுமியுள்ளனர். அவரது இறுதிக் கிரியைகளில் பகவத்கீதை, குர்ஆன், பைபிள் ஆகியவற்றிலிருந்து பொருத்தமான சுலோகங்கள் வாசிக்கப்பட்டதோடு சிங்கள – பாளி மொழிகளிலும் பிரார்த்தனைகள் செய்யப்பட்டன. இது பற்றி பேராசிரியர் அருணாசலம், “…. 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் பிறந்து 20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் மறைந்த விபுலாநந்தரை இந்துக்கள் மட்டுமன்றி இஸ்லாமியரும் பௌத்தரும் கிறிஸ்தவரும் அவர் வாழ்ந்து கொண்டிருக்கும் பொழுதும் போற்றினர். மறைந்த பொழுதும் போற்றினர்”[19] எனக் கூறுகின்றார்.

### 03. புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையும் முஸ்லிம் சமூகமும்

விபுலாநந்தரின் சமகாலத்தவரான புலவர்மணி முஸ்லிம் சமூகத்துடன் கொண்டிருந்த தொடர்பு ஆழமானது. 1956ஆம் ஆண்டில் கல்முனையில் நடைபெற்ற அரசியல் மகாநாட்டில் இந்து இஸ்லாம் ஒற்றுமை பற்றி புலவர்மணி அவர்கள் ஒரு கவியொன்றின் மூலம் தனது சொற்பொழிவிலே வெளிப்படுத்தியிருக்கின்றார்.

“இருதயத்தின் ஈரிதழ்போல் இந்துமுசி லீம்யாம்
ஒருவயிற்றுப் பிள்ளைகள்போல் உள்ளோம் - அரசியலில்
பேராசை கொண்டோர் பிரித்துநமை வேறாக்கி,
ஆராயார் செய்வார் அழிவு.”[20]

தமிழர், முஸ்லீம்கள் ஆகிய நாம் மட்டக்களப்பு அன்னையின் இருதயத்தின் இரண்டு இதழ்களையும் போன்றவர்கள். இரண்டு இதழும் ஒத்து இயங்கினால் தான் இருதயத் துடிப்பு நிலைபெறும். ஒத்து இயங்காவிடின் இருதயத் துடிப்பு நின்று போகும். அன்னையின் உயிர் வாழ்வுக்கு இந்து, முஸ்லீம்களாகிய நமது ஒற்றுமை அவசியம் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். பிரிவினைச் சக்திகளுக்கு இடம்கொடுத்து அழிவுப்பாதையிலே செல்லாமல் நம்மை நாம் பாதுகாத்துக் கொள்வோமாக என்னும் பொருளமைந்தது இப்பாடல்.

(அ) ஏ.எம்.ஏ. அசீஸுடன் கொண்ட உறவு

கல்முனையில் 1941இல் அவசர காலக் கச்சேரி ஒன்று நிறுவப்பெற்றது. முதலாவது அரசாங்க உதவி அதிபராக அல்ஹாஜ் ஏ.எம்.ஏ. அசீஸ் அவர்கள் நியமனம் பெற்றார்கள். இவ்வேளை வ. நல்லையா அவர்கள் புலவர்மணியிடம் சென்று ‘கல்முனை உதவி அரசாங்க அதிபர் நல்ல தமிழறிஞர் ஒருவருடன் தொடர்புகொள்ள விரும்புகிறார். நான் உங்கள் பெயரைத்தான் சொல்லியிருக்கிறேன். விரைவில் இருவரும் உங்களைச் சந்திக்க வருவோம்’ என்று கூறினார். இதன் பின்பு புலவர்மணிக்கும் ஏ.எம்.ஏ. அசீஸிக்கும் நெருங்கிய உறவு உண்டாயிற்று. இது பற்றி புலவர் மணி குறிப்பிடும் போது,

“பின்னர் இரண்டு மூன்று நாள் கழித்து இருவரும் குருக்கள் மடத்துக்கு என்னைப் பார்க்க வந்தார்கள். அன்று தொடக்கம் கல்முனையிலிருந்து மட்டக்களப்புக்குப் போகும்போதெல்லாம் அசீஸ் பெரும்பாலும் என்னைச் சந்தித்துக் கொள்வார். சில ஆங்கிலச் சொற்களுக்குத் தமிழும் கேட்டுக் குறித்துக் கொள்வார். கூட்டங்களிலே தமிழிற் பேசும்போது என்னைத் தமது பக்கத்தில் வைத்துக் கொண்டே பேசுவார். பேச்சுக்களின் இடையே தகுதியான தமிழ்ச் சொற்கள் சிலவற்றை என்னிடம் கேட்டு அறிந்து கொண்டு அவற்றை அமைத்துப் பேசுவார். அவர் கல்முனையில் இருக்கும் காலமெல்லாம் இவ்வண்ணம் நடந்து வந்தது தமிழும் இனிமையும் போல எங்கள் நட்பும் நிலைபெறலாயிற்று.”[21] எனப் பெருமிதத்துடன் தனது கட்டுரையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அசீஸ் அவர்களின் சமூகப்பணிகள் பற்றி தனது கட்டுரைகளின் பல இடங்களில் பேசியுள்ளார் புலவர்மணி. அசீஸ் கல்முனையில் இருந்த காலப் பகுதியில் விவசாயிகள் மத்தியில் ஒரு விழிப்புணர்ச்சி உண்டாயிற்று. அவர்களுக்கு எதிர்காலம் பற்றி ஒரு புது நம்பிக்கை பிறந்தது. விவசாயிகளே நாட்டின் முதுகெலும்பு என்பதை அவர்கள் உணர்ந்தார்கள். விவசாயிகள் எழுச்சியைக் கண்டு மகிழ்ச்சியடைந்த அசீஸ் அவர்கள் கல்முனையில் ஒரு விளைவு விழாக்கான விழைவு கொண்டார். 1942இல் விளைவு விழாச் சபையொன்று நிறுவப்பெற்றது. அதன் தலைவராக அசீஸ் அவர்களும், காரியதரிசியாக ஜனாப் முதலியார் எம்.எஸ். காரியப்பரும் பணி புரிந்தார்கள். இதன் போது அஸீஸின் சிறப்புக்கள் பற்றி புலவர்மணி,

“வாழ்க விளைவுவிழா வாழ்க பொருட்காட்சி
வாழ்க அசீஸ்துரையும் - கிளியே
மங்களம் பொங்குகவே.”[22]

என வாழ்த்துப்பா பாடியுள்ளார். அசீஸ் இங்கிருந்து உத்தியோக மாற்றம் பெற்றுச் செல்லும்போது பக்கத்திலே தமிழறிஞர் ஒருவர் இருக்க வேண்டிய அவசியமில்லாமற் போயிற்று. அவர் பெரிய தமிழறிஞராகி விட்டார். அவர் தமிழிலே பிறந்து, தமிழிலே வளர்ந்து, தமிழிலே நிறைந்த ஒரு யாழ்ப்பாணத்தவர். வைதீசுவர வித்தியாலயத்திலும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் படித்தவர். இதனை,

"புலத்துயர்ந்து வண்மைப் புகழ்க்கதிர்கள் வீசி
நிலத்ததிகா ரஞ்செய்து நின்று – பலத்தினிறை
நல்ல களம்பொலிந்து நாடு புரத்தலால்
நெல்லும் அசீஸ்துரைக்கு நேர்"[23]

என்கிறார் புலவர்மணி. இது நெல்லுக்கும் அசீசுக்கும் சிலேடை. வயலில் வளர்ந்து உயர்ந்து வாரி வழங்குகின்ற புகழினையுடைய தானியக் கதிர்களைப் பரப்பி நிலத்திலிட்ட ஒருநெல் பல நெல்லுகளாக அதிகரித்து நின்று பயனில் நிறைவு பெற்ற நல்ல நெற்களத்திலே பொலிகளாகக் குவிந்து உணவூட்டியும் பணமீட்டியும் நாட்டைப் பாதுகாப்பதால் நெல்லும் அசீஸ்துரைக்கு நிகராகும் என நெல்லின் மேல் வைத்துப் பொருள் கொள்ள வேண்டும். இதுபோல் அறிவில் உயர்ந்து கொடையால் வருகின்ற புகழாகிய ஒளியைப் பரப்பி நாட்டில் நிருவாக அதிகாரம் செய்து நின்று கற்றோர் அவைக் களத்திற் பொலிவுபெற்று நாட்டைப் பாதுகாப்பதால் நெல்லும் அசீஸ்துரைக்கு நேராகும் என அசீஸ்துரையின்மேல் வைத்துப் பொருள் கொள்ள வேண்டும் எனப் புகழ்ந்து பாடியுள்ளார் புலவர்மணி.

இச்செய்யுளை வாசிக்க நேரிட்ட முதலியார் காரியப்பர் இவர்களது நட்பு பற்றி அன்பொழுக கூறியுள்ளார். இதனை புலவர்மணியே தனது கட்டுரையொன்றில் குறிப்பிடுகின்றார். "முதலியார் காரியப்பர் இப்பிரியாவிடைச் செய்யுளை நான் பாடக் கேட்டதும் தம்மையே மறந்து போனார். இப்படிப் பாடுவது அபூர்வம் அபூர்வம். பழைய புலவர்களுக்குத்தான் இது முடியும். இப்போதுள்ளவர்களால் பெரும்பாலும் இது இயலாத காரியம். இந்தப் பாட்டின் மூலமாக உங்கள் இருவரின் நட்பும் நிலைத்து நிற்கும்"[24] எனக் கூறியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

1956ஆம் ஆண்டில் கல்முனையில் நடைபெற்ற அரசியல் மகாநாடு ஒன்றில் அல்ஹாஜ் ஏ.எம்.ஏ. அசீஸ் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு ஆற்றிய சிறப்புச் சொற்பொழிவில் வெளிப்படுத்தப்பட்ட சமூக நல்லறவுகளை வெளிப்படுத்தும் கருத்துக்களை புலவர்மணி தனது கட்டுரையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

"கிழக்கிலங்கையிலே தமிழர்களும் இஸ்லாமியர்களும் எந்தச் சக்தியாலும் பிரிக்க முடியாதபடி இணைந்து வாழ்கின்றார்கள். இந்த இணைப்புச் சாதாரணமான ஒன்றல்ல. தமிழ் மொழியினால் உண்டான இயற்கையான இணைப்பு உயிர்ப்புள்ளது துடிப்புள்ளது. இரண்டு இனமும் இந்த நாட்டின் பழங்குடிகள். நம் முன்னோர்கள் இங்கே அண்ணன் தம்பிகள் போல் வாழ்ந்திருந்தார்கள். நமது சந்ததியிலும் இந்த ஐக்கியம் நிலைபெற வேண்டும். எதிர்காலம் சந்ததிக்கும் இந்த ஐக்கியமே பாதுகாப்பாக அமைய வேண்டும்"[25] என அஸீஸ் அவர்கள் சமூக நல்லுறவு பற்றிய சொற்பொழிவை வெளிப்படுத்தியுள்ளார் புலவர்மணி.

(ஆ) முதலியார் காரியப்பருடன் கொண்ட உறவு

காரியப்பர் ஒரு கரும வீரர் அழகாக ஆங்கிலம் பேசுவார். இந்தியாவில் எம்.எஸ். என்றால் எம்.எஸ். சுப்புலட்சுமியைக் குறிப்பதுபோல மட்டக்களப்பில் எம்.எஸ். என்றால் முதலியா காரியப்பரையே குறிக்கும். அவ்வளவு பிரபலமானவர் அவர். கரைவாகுப் பகுதி வன்னிமை முதலியாராகவும் கூட்டுறவு இயக்கப் பிரமுகராகவும் நாடாளுமன்றப் பிரதிநிதியாகவும் இலங்கை முழுவதும் புகழ் பரப்பியவர் முதலியார் காரியப்பர் என காரியப்பரைச் சிறப்பித்துப் பேசுகிறார் புலவர்மணி. அன்னாரின் வாழ்க்கைத் துணைவியார் உம்மு குல்தூம் அம்மையார் எல்லா நல்லியல்புகளும் ஒருங்கே அமைந்த ஒரு உயர் குடும்பப் பெண்ணாவார். செல்வச் செருக்கினை வென்ற அம்மாதர் திலகம் எளிமையும் இனிமையுமே வடிவானவர். ஏழைகளின் புகலிடம் எனப் புகழும் புலவர்மணி, எனது மனைவி மக்கள் கொழும்பிலே ஒருவார காலம் அம்மையாரின் விருந்தாளிகளாக "மெடோ சுவீற்" என்னும் இல்லத்தில் தங்கியிருந்தபோது அவர் செய்த இனிய உபசாரங்களையும், அவரின் மக்கள் காட்டிய அன்பையும் இறக்கும்போதும் நாங்கள் மறப்பதற்கில்லை. இது ஒரு முன்மாதிரியான குடும்பம்[26] என இஸ்லாமிய சமூகத்துடன் தான் கொண்டிருந்த நெருக்கம் பற்றி வெளிப்படுத்தியுள்ளார்.

(இ) ஜனாப் நூர்தீனுடன் கொண்ட உறவு

1966ஆம் ஆண்டில் நடைபெற்ற இஸ்லாமிய இலக்கிய கலாசார மகாநாட்டிலேயே நூர்தீனை முதன் முதலில் புலவர்மணி சந்தித்துள்ளார். இச்சந்திப்பு பற்றி புலவர்மணி கூறும் போது, "மகாநாட்டின் காலை நிகழ்ச்சிகள் நிறைவுற்ற பின்புதான் நூர்தீன் அவர்களை நான் அணுகினேன். அன்னார் என்னைப் பார்த்து, நான் மட்டக்களப்பிலிருந்தபோது உங்களுடன் பழகாமல் விட்டதற்கு மிகவும் வருந்துகின்றேன். பழகியிருந்தால் எவ்வளவு இனிமையாய் இருந்திருக்கும்? ஏன் பழகாமல் விட்டேன் என்பதற்குக் காரணமும் தெரியவில்லை என உபசார மொழிகள் கூறி அன்பு பாராட்டினார். இருவரும் நண்பர்களாகி விட்டோம். சில நாட்களின் பின் நான் வித்தியா கந்தோருக்குச் சென்று ஜனாப் நூர்தீன் அவர்களைச் சந்தித்தேன். அவர் என்னை இன்முகம் காட்டி வரவேற்று இந்தியப்

பட்டதாரிகளுக்கும் வேலை வழங்குவதாக எங்கள் திட்டத்தை நாங்கள் மாற்றிக்கொண்டமையால், உங்கள் மகன் உட்பட இருபதுபேர் நன்மையடைந்துள்ளார்கள் என அவர் கூறினார். நான் அன்னாருக்கு நன்றி கூறிக் கொண்டு விடைபெற்றுச் சென்றேன்”[27] என நூர்தீனுடன் கொண்ட நட்பு பற்றி தனது கட்டுரையொன்றில் புலவர்மணி குறிப்பிட்டுள்ளார்.

#### 4. தொகுப்பும் முடிவுரையும்

முஸ்லிம் சமூகத்துடன் தமிழ் அறிஞர்கள் கொண்டிருக்க வேண்டிய நல்லுறவின் அவசியத்தை இவ்வாய்வின் மூலம் அறிய முடிகின்றது. இது ஒரு மாதிரி முறையில் அமைந்த ஆய்வாக அமைகின்றது. சுவாமி விபுலாநந்தர், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை ஆகியோர் இஸ்லாமிய சமூகத்துடன் கொண்டிருந்த நெருக்கத்தினால் ஏற்பட்ட நல்லிணக்கத்தை தெளிவாக உணர முடிகின்றது. இவர்களது மனநிலையை ஆழமாக ஊடுருவி சிந்திப்பதன் மூலமே அவ்வழியில் எம்மையும் ஈடுபடுத்திக் கொள்ளமுடியும்.

இவ்வாறு ஈடுபடுத்திக் கொள்வதன் மூலம்,

01. வேறுபடுகின்ற வகுப்பினருக்கிடையே புரிந்துணர்வுடனும் சகிப்பித்தன்மையுடனும் கூடிய நல்லிணக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளமுடியும்.
02. பன்முகத்தன்மையிலிருந்து ஒருமுகத்தன்மைக்கு வரமுடியும்
03. இனங்கள் ரீதியாக உள்ள வேறுபாடுகளை மறந்து ஒருமைப்பாட்டை பேணமுடியும்.
04. சகவாழ்வோடு பிறருடன் அன்னியோன்னியமாக வாழமுடியும்.

கல்வியினால் சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என்பதை அவர்கள் நிறுபித்துக் காட்டியிருக்கின்றனர். இவர்களது சமகாலத்தில் வாழ்ந்த முஸ்லிம் அறிஞர்களுடன் இவர்கள் இணைந்து மேற்கொண்ட பணிகள் இன்றைய காலகட்டத்திற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டுக்கள்.

#### உசாத்துணைகள்


1) அந்தனி ஜீவா, 1992, சுவாமி விபுலாநந்தர், சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டுச் சபை, ப.7
2) முருகபூபதி, லெ., 1977, புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை, மல்லிகை, ப.5
3) நஹியா,ஏ.எம். 1994, முஸ்லிம் நேசர் சுவாமி விபுலாநந்தர், விபுலானந்தர் நூற்றாண்டு விழாச்சபை,ப.2
4) செல்வநாயகம், அருள், (தொகு.), 1965, விபுலாநந்த ஆராய்வு, ப.128
5) மேலது, ப.129
6) மேலது, ப.129
7) மேலது, ப.130
8) மேலது, ப.130
9) செல்வநாயகம், அருள், (தொகு.), 1965, விபுலாநந்த இன்பம், ப.177
10) நஹியா,ஏ.எம். 1994, முஸ்லிம் நேசர் சுவாமி விபுலாநந்தர், விபுலானந்தர் நூற்றாண்டு விழாச்சபை
11) Kanapathipillai,K., 1991, Vipulananda – A Biography the Man and his achievements office of the state minister for Hindu religious & Cultural Affairs, Colombo, p.182
12) Azeez,A.M.A., 1964, The West Reappraised Saman publishers Ltd., Maharagama, p.66
13) நஹியா,ஏ.எம். 1994, முஸ்லிம் நேசர் சுவாமி விபுலாநந்தர், விபுலானந்தர் நூற்றாண்டு விழாச்சபை, பக்.20-21
14) சீக்ஷா வல்லி, தைத்திரிய உபநிஷத்.
15) சற்குணம்,எம், 1969, அடிகளார் படிவமலர், காரைதீவு, ப.51
16) நஹியா,ஏ.எம். 1994, முஸ்லிம் நேசர் சுவாமி விபுலாநந்தர், விபுலானந்தர் நூற்றாண்டு விழாச்சபை, ப.32
17) அஸீஸ்,எ.எம்.எ., 1948, யான் அறிந்த விபுலாநந்த அடிகள், ஈழமணி (விபுலாநந்த நினைவு மலர்), ப.72
18) நஹியா,ஏ.எம். 1994, முஸ்லிம் நேசர் சுவாமி விபுலாநந்தர், விபுலானந்தர் நூற்றாண்டு விழாச்சபை, பக்.34-35
19) அருணாசலம், க., 1992, சுவாமி விபுலாநந்தரின் சமயச் சிந்தனைகள், தமிழ்மன்றம், கண்டி. பக்.39–40
20) பெரியதம்பிப்பிள்ளை,ஏ., 1982, உள்ளது நல்லதும், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப் பணிமன்றம், மட்டக்களப்பு, ப. 124
21) மேலது, ப.127
22) மேலது, ப.134
23) மேலது, ப.125-126
24) மேலது, ப.143
25) மேலது, ப.136
26) மேலது, ப.127
27) மேலது, ப.139